WEB COPY

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 122/2024** |
| Deposition of Witness for | : | **P.W. 1** |
| Name | : | **சொக்கநாத பாண்டியராஜ்** |
| Father's Name | : | **சுப்பையா** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | **37/2026** |

**(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 20.07.26

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்சமயம் சென்னை வேளச்சேரி காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் காளையார்கோவில் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியிலிருந்த சமயம் கடந்த 02.06.2023 ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் காளையார்கோவில் காவல்நிலைய ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஒரு நபர் ஆத்தாவூரணி கிழக்கு கரையில் வாளுடன் சுற்றுவதாக கிடைத்த தகவலின் படி ஆய்வாளருடன் நான், சார்பு ஆய்வாளர் தட்சிணாமூர்த்தி, முநிக பழனிவேல் ஆகிய போலிஸ் பார்ட்டியுடன் மதியம் சுமார் 12.15 மணியளவில் சம்பவயிடம் சென்று கண்காணித்தபோது அங்கிருந்த எதிரி குட்லு என்ற கார்த்தி எங்களை பார்த்து உங்களுக்கு இதே

வேலையா போச்சா போலிஸ் நாய்களா என்று திட்டி கொலை மிரட்டல் விடுத்தவரை நாங்கள் சுற்றி வளைத்து பிடித்து எதிரியை கைது செய்து எதிரி வைத்திருந்த வாளை தனி நபர் யாரும் இல்லாததால் போலிஸ் பார்ட்டியாகிய என் முன்னிலையிலும் முநிக பழனிவேல் என்பவர் முன்னிலையிலும் கைப்பற்றுதல் மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார் அதற்கு சாட்சியாக நாங்கள் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1** ஆகும். என்னிடம் காட்டப்படும் வாள்தான் வழக்கின் எதிரி சம்பவ சமயத்தில் வைத்திருந்ததை கைப்பற்றுதல் மகஜரின் பேரில் ஆய்வாளர் கைப்பற்றியதாகும். அந்த **வாள் அ.த.பொ.சா.1** ஆகும். கைப்பற்றப்பட்ட சொத்துடன் எதிரியை நிலையம் கொண்டு வந்து காளையார்கோவில் காவல்நிலைய குற்ற எண்.190/2023 வழக்கு பதிவுசெய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 1 கி.மீ இருக்கும். எதிரியின் வீடு காளையார்கோவில் கிழக்கு ஒத்த வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான், சம்பவயிடமாக சொல்லப்படுவது அவருடைய வீடு பகுதி என்றால் சரிதான், அவருடைய வீட்டிலிருந்து சுமார் 500 மீ தொலைவாகும். ஆத்தாவூரணியை சுற்றி மருதுபாண்டியர் சிலை மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகாமையில் தான் அன்னியவல் கிராமத்திற்கு செல்லும் சாலையின் நுழைவு வாயில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் பொதுமக்கள் அதிகம் நடமாடும் இடம் என்றால் சரியல்ல, ஓரளவு நடமாட்டம் உள்ள பகுதியாகும். ஒரு நபர் வாளுடன் சுற்றினால் பொதுமக்களுக்கு தெரிய வாய்ப்புண்டு என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு செல்வதற்கு அனுமதி பெறப்பட்டதா என்றால் ஆய்வாளர் ரோந்து பணிக்காக என்னையும் அழைத்து சென்றார். நீதிமன்றத்தில்

WEB COPY

தாக்கல் செய்யப்பட்ட படிவம் 91 ஜாபிதாவில் சுமார் 75 செ.மீ நீளமுள்ள வாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் இரும்பு பகுதி 6.1/2 செ.மீ என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.1 ஆவணத்தில் அடங்கியுள்ள கைப்பற்றுதல் மகஜரில் சுமார் 84 செ.மீ நீளமுள்ள வாள் என்றும் இரும்பு பாகம் 72 செ.மீ என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் , சொன்ன இடத்தில் வைத்து எதிரியை பார்க்கவில்லை என்றும் எதிரியிடமிருந்து வாளை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்யவில்லை என்றும் பின்னீடு மேலதிகாரி தயார் செய்த பேப்பரில் காவல்நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றும் அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று எதிரியின் பிறந்த நாள் என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறாததால் தான் தனி நபர் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

/Sd./S.Mohana Ramya,

உதவி அமர்வு நீதிபதி,

தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

சிவகங்கை.

WEB COPY